# காலம் நம் கையில் இல்லை!

காலத்தை மணல் போல்,
கையிருகப் பிடித்திருந்தால்;
கட்டுண்டா நிற்கும்?..

புரிகிறது!
ஆனாலும் வருத்தம்,
ஒரு புகை போல் மனம் சூழ்கிறது.
இன்று நீங்கள், நாளை நான்!.

அலுவலகத்தில்,
மாடிப்படியருகில்,
தாழ்வாரங்களில் என்று
தயாரிப்பில்லாத திடீர் சந்திப்புகளில்...
தங்களுடனுனான சில மணித்துளிகள்!
உரையாடல்களில்...,
தாங்கள் காட்டிய அன்பும், வாஞ்சையும்,
எனது நினைவுகளில்,
என்றும் நிறைந்திருக்கும்!.



அவ்வப்போது,
நான் கிறுக்கும் சில வரிகளைப்;
பாராட்டிப் பெருந்தன்மையோடு,
நீங்கள் அளித்த வாழ்த்துக்கள்,
என் நேசத்துக்குரியவை!

இனி,
அலுவலகத்தின்;
மாடிப்படிகளினருகாமையும்,
தாழ்வாரங்களும்,
உங்களைச் சந்தித்து அளவளாவும்,
வாய்ப்பினி இல்லை என்பதான;
வெறுமை பூசி நிற்கும்!.

அமைதியும், மகிழ்ச்சியும்,
நிறைந்த வாழ்வினை;
தங்களின் பிரிய கண்ணன்,
தங்களுக்கு வழங்குவான்.

அன்புடன்,

- நடராஜன் *(Nats)*